கோவை – திருப்பூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான

# ஆணைமலை நல்லாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுக!

## சட்டப்பேரவையில் உடுமலைப்பேட்டை மு.ஜெயக்குமார் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.29-

சட்டப்பேரவையில் உடுமலைப்பேட்டை தொகுதி உறுப்பினர் மு.ஜெயக்குமார் பேசுகையில், கோவை, திருப்பூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆணை மலை நல்லாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் குடிநீர், நகராட்சி, உயர் கல்வித் துறை, செய்தித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் உடுமலைப்பேட்டை மு.ஜெயக்குமார் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள்

வெற்றித் தோள்கள்!

கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம்

எங்கள் உள்ளம்!

வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்

எங்கள் மூச்சாம்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று

சங்கே முழங்கு!'

பேரவைத் தலைவர் அவர்களே,

"தலைவணங்கிப் பழகாதே; தலைநிமிர்ந்து வாழக் கற்றுக்கொள்!

மூடநம்பிக்கையை நம்பாதே; பகுத்தறிவை நம்பு!

சாதி என்ற சுவரை உடைத்து, சமத்துவத்தை நிலைநாட்டு!

மனிதனை மனிதனாக மதிப்பதே உண்மையான சுயமரியாதை!"

என்று தன் வாழ்நாள் எல்லாம் சுயமரியாதைக்காக வாழ்ந்து, தமிழர்களுக்கு அறிவூட்டிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், தமிழின் பெருமையைத் தன் நாவால் உலகறியச் செய்தவர்; சாமானியனும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற சமூகநீதிக் கனவை அரசியலாக்கியவர்; அறிவையும், ஜனநாயகத்தையும் ஆயுதமாகக் கொண்டு ஆட்சியின் வாசலை ஏழை, எளிய மக்களுக்காகத் திறந்தவர்; "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற மூன்றெழுத்து மந்திரத்தால் தன் தம்பிமார்களை வழிநடத்தி, தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் வைத்து, நம்மையெல்லாம் தலைநிமிரச் செய்த அறிவாசான் பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

அண்ணா விதைத்த திராவிடச் சிந்தனை எனும் விதையை ஆட்சியின் வழியாக வளர்த்து, ஏழை, எளிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் எண்ணற்ற நலத்திட்டங்களின்மூலம் மாற்றத்தை ஏற்படுத்தியவர், "வாழும் போதே வரலாறு படைத்தவர்" முத்தமிழறிஞர் கலைஞர்.

ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார உயர்வு, பெண்களுக்குச் சொத்துரிமை, சமத்துவபுரங்கள், உழவர் சந்தைகள், கல்வி, தொழில்நுட்பம் என சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய தொலைநோக்குப் பார்வை கொண்ட மாபெரும் தலைவர்.

கலைஞரின் பேனா முனை தீட்டிய திட்டங்களும், அவர் விதைத்த சமூக நீதிச் சிந்தனைகளும்தான் இன்றைய நவீன தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் வலிமையான அடித்தளமாக உள்ளன.

இந்தியாவிலேயே முதன் முதலாக தகவல் தொழில்நுட்பத் துறைக்கு தனிக் கொள்கையை வகுத்து TIDEL Parkகளை உருவாக்கி இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு கும்பிடுகிறேன் சாமி என்று இருந்த மக்களை கெத்தாக துண்டை தோளில் போட வைத்து, அவர்களின் குழந்தைகளை tie அணிந்து TIDEL Parkக்கு அனுப்பி வைத்த ஒப்பற்ற ஒரே தலைவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டியாக முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன், கால் நூற்றாண்டுக்கு முன்பு 1990, 2000 ஆகிய ஆண்டுகளிலேயே மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வியை அறிமுகப்படுத்திய கலைஞர் அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன்.

### காலை உணவுத் திட்டம்!

உடுமலைப்பேட்டைக்கு அருகில் பூலவாடி என்னும் சிறிய கிராமத்தில் பிறந்து, அரசியல் சுவடு அறியாத ஏழை விவசாயக் குடும்பத்தில், மின்சார வாரியத்தின் கடைநிலை ஊழியரின் மகனாகப் பிறந்து கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை, இந்த எளியவனை நம்பி, எட்டுத் தொகுதிகளைக் கொண்ட ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டத்தின் இளைஞர் அணி அமைப்பாளராகப் பணியாற்றிட வாய்ப்பளித்து, இன்று தமிழகத்தை வடிவமைத்த பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்கள் இருந்த இந்த அவையில் சாதாரண எளிய தொண்டனான நான்.

இவ்வாறு எத்தனையோ பேர் அங்கே சொன்னீர்கள்,

சாதாரண எளிய தொண்டனாக இருக்கக் காரணமாக இருந்த திராவிட மாடல் ஆட்சியின்மூலம் மகளிர் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப் பெண், நான் முதல்வன், தமிழ்ப் புதல்வன், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி போன்ற மகத்தான திட்டங்களைத் தந்து, ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே ஆட்சியின் முதன்மை நோக்கமாகக் கொண்டு, 'மக்களுக்காக ஆட்சி, மக்களின் நலனுக்காகவே ஒவ்வொரு திட்டமும்' என்ற பாதையில் அயராது உழைத்து, இந்தியாவில் யாரும் செய்திடாத வகையில், இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டை உயர்த்தி, நம்மையெல்லாம் வழிநடத்தும், இந்தியாவிலேயே முதன்முறையாக பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் தந்து, ஏழைப் பிள்ளைகளின் பசியாற்றிய திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த எளியவனுக்காக உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் இரண்டு இடங்களில் பரப்புரை செய்த, இளமைத் துடிப்பில் உதித்த செங்கதிர், இனத்தின் உரிமை காக்கும் மாவீரன், அஞ்சா நெஞ்சுடன் களத்தில் நிற்கும் தலைவன், அநீதிக்கு எதிராய் முழங்கும் அக்னிக் குரல், பெரியார் விதைத்த பகுத்தறிவு நெருப்பு, அண்ணா காட்டிய சமத்துவ வெளிச்சம், கலைஞர் வடிவமைத்த நவீன தமிழகத்தைக் கைப்பிடித்து முன்னெடுக்கும் இளைய தலைவன், வெற்றி வரினும் தலைக்கனம் அடையாது, வீழ்ச்சி வரினும் பின்வாங்கித் தளராது, தமிழர் நலமே எனது நெஞ்சின் மொழி, தொண்டரின் பலமே எனது பயண வழி என்று வீராதி வீரனாய் உலா வரும், தமிழ்நாட்டின் விடியலாகும் இளைய நம்பிக்கை, எதிர்ப்புகள் எத்தனை வரினும் அஞ்சாது, எரிமலையாய் எழுந்து நிற்கும் எங்களின் 'ஒரே தல', எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு ஆலோசனை கூறி என்னை வழிநடத்தும் கழகத் துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அண்ணன் மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், மக்கள் மனதில் இடம் பெற்றிருக்கும் மண்டலப் பொறுப்பாளர்கள் அண்ணன் அர. சக்கரபாணி அவர்களுக்கும், செந்தில்பாலாஜி அவர்களுக்கும், அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், மாவட்டக் கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி அவர்களுக்கும், அன்பகம் கலை அவர்களுக்கும், அன்பகம் செந்தில் Sir அவர்களுக்கும், தொகுதிப் பொறுப்பாளராகப் பணியாற்றிய சகோதரர் இன்பாரகு அவர்களுக்கும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு பகல் பாராது உழைத்து, என்னை வெற்றி பெறச் செய்த உடுமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் கழகத்திற்காக உழைக்கும் தியாக மறவர்களான திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், எனக்கு வாக்களித்த உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடுமலை நாராயண கவி பிறந்த மண்!

உடுமலை என்கிற உன்னத மண்ணில் இலக்கியத்தில் முத்திரை பதித்து, சிந்தனையில் சிகரம் தொட்ட பகுத்தறிவுக் கவிராயர் எனப் போற்றப்படும் உடுமலை - நாராயணகவி பிறந்த மண்ணில் பிறந்தவன் என்பதிலும், உடுமலையின் பொக்கிஷம், உழைப்பின் திருவுருவம், சிறுபான்மை மக்களின் மூச்சாகச் செயல்பட்டவர், திராவிடத்தின் திரளாக வாழ்ந்த எஸ்.ஜே.சாதிக்பாட்சா அவர்களும், உடுமலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, தொகுதியின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட செல்வராஜ் ஆகியோரும் வாழ்ந்த மண்ணில் வாழ்பவன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அணிகலனாய், மழையால் மண் தழுவி அசைந்து வளம் கொழிக்கும், மேற்கே ஆனை மலை, கிழக்கே பழனி மலை, தெற்கே திருமூர்த்தி மலை, வடக்கே செஞ்சேரி மலை ஆகிய இவற்றுக்கிடையில் அமைந்திருக்கும் அமராவதி மண்ணிலிருந்து, "ஏங்க, ஏனுங்க" என்று தமிழுக்கே பெருமை சேர்க்கும் கொங்குத் தமிழில் பேசி, வாழையோடு, விண்முட்டும் கமுகும், தேன் சொட்டும் கரும்பும், உயிர் கொடுக்கும் நெல்லும் வளர்க்கும் உழவர்களாகவும், விவசாயத் தொழிலாளர்களாகவும் வேளாண்மை செய்யும் மூத்தகுடி மக்களின் எளிய மக்களின் பிரதிநிதியாக, இங்கு வந்து நிற்பதில் பெரு உவகை கொள்கிறேன்.



உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் வளர்ச்சிக்கு கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்:

கோவை, திருப்பூர் மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான ஆனைமலைநல்லாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுகிறேன். அதேபோல், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தின்ParambikulamAliyar Project (PAP) கால்வாய்கள் மற்றும் உள்கட்டமைப்புகளைப் புதுப்பிக்க ரூ.4,500 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கை வருகிறபோது, அதனை concrete தளமாக அமைப்பதற்கு DPR கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் திருப்பூருக்கு வந்தபோது ஒரு பேட்டி கொடுத்திருந்தார்கள். அப்போது pipeline அமைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இது விவசாயிகளிடம் ஒரு மிகப் பெரிய சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது. எனவே, நீங்கள் அதனை concrete ஆக அமைக்கிறீர்களா அல்லது pipeline ஆக அமைக்கிறீர்களா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

அதேபோல், PAP கால்வாய் பாசனம் நடைபெறும் பகுதிகளில், இப்பொழுது கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இதனால் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்குக் கூட போதிய நீர் கிடைக்காமல் விவசாயிகள் கடுமையாக சிரமப்படுகின்றனர். எனவே, PAP, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் நீர் இருப்பைக் கருத்தில் கொண்டு, இரண்டாம் மண்டல பாசனத்திற்கு உடனடியாக இரண்டு சுற்றுகள் தண்ணீர் திறந்துவிட வேண்டும். மேலும், மானியக் கோரிக்கையில் பி.ஏ.பி. கால்வாய்களைத் தூர்வாருவதற்காக அறிவிக்கப்பட்ட ரூ.14.98 கோடி நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும். ஏனென்றால், தற்போது தண்ணீர் மிகவும் குறைவாக இருக்கிறது.

அது இந்த காலகட்டத்தில் பார்த்தீர்களென்றால், 5 சுற்றுகள் தண்ணீர் திறந்துவிடுகிற அளவிற்கு மழை பெய்திருந்தால் இருந்திருக்கும். ஆனால், இப்போது 2 சுற்றுகள் தண்ணீர் திறந்துவிடுவதே கஷ்டமாக இருக்கிறது. அந்த 2 சுற்றுகள் தண்ணீர் திறந்துவிடுகிறீர்கள் என்றாலுமே எல்லா வாய்க்கால்களும் மண்மூடி கிடக்கிறது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் 10 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இப்போது அதற்கு 14.98 கோடி ரூபாய் நீங்கள் கொடுப்பதாக, உங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் தண்ணீரைத் திறந்துவிட்டாலும், வாய்க்காலைத் தூர்வாராமல் அந்த தண்ணீர் கடைமடை வரையிலும் வந்து சேராது. அதனால் 14.98 கோடி ரூபாயை உடனடியாக விடுவித்து போர்க்கால அடிப்படையில், கால்வாய்களைத் தூர்வாரி சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

### பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்க!

தற்போது கொங்கு மண்டலப் பகுதிகளில், எனக்குப் பக்கத்தில் இருக்கிற வைத்திலிங்கம் அண்ணன் அவர்கள்கூட, 400 அடிக்குக்கீழ் தண்ணீர் போய்விட்டது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது எங்கள் areaவில் எல்லாம் கொங்கு மண்டலத்தைப் பொறுத்தவரை 2,000 அடிக்குக்கீழ் தண்ணீர் சென்றுவிட்டது. ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைத்து, borewell ஒன்று அமைத்து செய்ய வேண்டுமென்றால், ரூ.20 இலட்சம் வரை ஒரு விவசாயிக்கு தேவைப்படுகிறது. எனவே, கடும் வறட்சி நிலவக்கூடிய இந்த நேரத்திலாவது, நீங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்ததுபோல், முழுமையாக பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 60,120 விவசாயிகள் tatkal மின் இணைப்புகள் வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள். சுமார் 1,500 கோடி ரூபாய் அதற்கு பணம் கட்டியிருக்கிறார்கள். இப்போது 5 ஏக்கர் இருக்கிறது என்றால் ஒரு borewell இருக்கிறது என்றால், ஒரு நாளைக்கு ஓடியது என்றால் அது 1,000 லிட்டர், 2,000 லிட்டர் ஓடுவதற்குத்தான் இருக்கும். ஏனென்றால், 2,000 அடிக்கும்கீழ் தற்போது தண்ணீர் சென்றுவிட்டது. அதனால், tatkal மின் இணைப்புத் திட்டத்தை உடனடியாக, அதற்கு முன்னுரிமை கொடுத்து, tatkal மின் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுகிறேன். அதேபோல், 'பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையை வளர்த்தா இளநீரு' என்று எங்கள் areaவில் ஒரு பழமொழி உண்டு. ஏனென்றால், தென்னை விவசாயிகள் உள்ள area. ஆனால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை அவ்வாறு கிடையாது. இன்றைக்கு கடுமையான தண்ணீர் தட்டுப்பாடும் இருப்பதனால் விவசாயிகள் லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து, தென்னை மரங்களைக் காப்பாற்றும் சூழல் நிலவி வருகிறது. எனவே, கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரங்கள், நீங்கள் அங்கு வந்து பார்த்தீர்களென்றால் தெரியும். பல இடங்களில் தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து தொங்கிக் கொண்டிருக்கிறது, விழுந்துவிட்டது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தென்னை மரங்களுக்கு உறுதியாக வறட்சி நிவாரணமும், இழப்பீடும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடுமலைத் தொகுதிக்குட்பட்ட கோமங்கலம் புதூரில் NHAI மூலம் ஒரு tollgate அமைத்திருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்புதான் திறந்திருக்கிறார்கள். இந்த tollgateல் உடுமலை பொள்ளாச்சி செல்லக்கூடிய வாகனங்கள், NHAI அமைத்த slip roadல் 2.5. கி.மீ. மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள். இதற்காக NHAI ஒரு வழிப்பாதைக்கு 155 ரூபாயும், return வரும்போது 80 ரூபாயும் என்று மொத்தமாக 235 ரூபாய் வசூலிக்கிறார்கள். இதுசம்பந்தமாக பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், நானும் Collector அவர்களைச் சென்று சந்தித்தோம். அந்த Collector எங்களிடம் எதுவும் இல்லை, NHAIல்தான் பேச வேண்டுமென்று சொன்னார். துறை அமைச்சர் அவர்கள், ஒன்றியத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு ஒரு அழுத்தம் தந்து, உடுமலைபொள்ளாச்சி செல்லக் கூடிய வாகனங்களுக்கு முழு வரிவிலக்கு, tollgate விலக்கு அளிக்க வேண்டும். இல்லையென்றால் அந்த tollgateஐ அங்கிருந்து ஒரு 2 கி.மீ. தள்ளி அமைத்தீர்கள் என்றால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். எனவே, இதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு மண்டலத்தைப் பொறுத்தவரை, கொங்கு மண்டலத்தைப் பொறுத்தவரை, rekla பந்தயம் என்பது. காலங்காலமாக நடந்து கொண்டிருப்பதுதான். ஆனால், நேற்று பொள்ளாச்சி பகுதியில், rekla பந்தயம் நடக்கிறபோது, அதிகாலையில் 500 காவலர்கள் சென்று, rekla பந்தயம் நடத்தக்கூடாது என்று சொல்லி, தடுத்து நிறுத்திவிட்டார்கள். இதைப்போல எப்போதுமே ஒரு தலைவரோட பெயரிலோ, கட்சித் தலைவரோட பெயரிலோ அல்லது பொது, கிராமங்களில் நடக்கக்கூடிய அந்த rekla பந்தயத்தை இவ்வாறு 500 காவலர்களைக் கொண்டு தடை செய்தது அந்தப் பகுதியில் மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு தங்களுடைய கருத்து என்ன என்பதையும் விளக்க வேண்டுகிறேன்.

### உடுமலை-பல்லடம் சாலையை நான்கு வழிச்சாலையாக ஆக்குக!

அதேபோல் இன்னொன்று, பொள்ளாச்சித் தொகுதி, பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். பெரிய கோட்டை, குருஞ்சேரி, பெதப்பம்பட்டி மற்றும் குடிமங்கலம் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளை உள்ளடக்கி புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்தித் தர வேண்டும். உடுமலை - பல்லடம் இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். உடுமலையில் அரசு engineering college ஏற்படுத்தித் தர வேண்டும்.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில் விவசாய பொருட்கள், தென்னைப் பொருட்கள், கால்நடைகள் மொத்த வணிக பயன்பாட்டிற்கு சந்தை வளாகம் அமைத்துத் தர வேண்டும். குடிமங்கலம் பகுதியில் பட்டுப்பூச்சி பதப்படுத்தப்படும் ஆலை, பட்டு வளர்ச்சித் துறை சார்பாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திராவிட மாடல் அரசின் சாதனைகளாக, பள்ளிக் கல்வித் துறையில் மட்டும் இரண்டேயிரண்டு விஷயங்கள் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளியை ஈடுகட்ட உலகமே திணறிய போது, இந்தியாவிற்கு வழிகாட்டியாக உருவெடுத்தது தான் இல்லம் தேடி கல்வித் திட்டம் ரூ.704.76 கோடி செலவில் தன்னார்வலர்களைக் கொண்டு மாணவர்களின் குடியிருப்புகளுக்கே சென்று கற்றல் கல்வி வழங்கி, இலட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வியைப் பாதுகாத்தோம்.

அதேபோல், நகராட்சி நிர்வாகத் துறையில், உடுமலைப்பேட்டைக்கு பக்கத்திலிருக்கக்கூடிய கிராமங்களான கணக்கம்பாளையம், போடிப்பட்டி, கண்ணமநாயக்கனூர், சின்னவீரம்பட்டி ஊராட்சிகளை உடுமலை நகராட்சியோடு இணைக்க வேண்டும் என்று கூறி பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், தமிழகப் பல்கலைக்கழகங்களில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும், அரசு கல்லூரிகளில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு UGC நிர்வகித்துள்ள ரூ.57,000. அந்தச் சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று கூறி, அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ளிட்ட அரசு உயர் கல்வி நிறுவனங்களில் 15 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்து வருபவர்கள், முனைவர் பட்டம் பெற்று அரசின் பல்கலைக்கழகத் தகுதித் தேர்வில் TRB, தேர்ச்சி அடைந்திருப்பவர்களுக்கு தமிழ்நாடு அரசாணை நிலை எண் 2406 தேதி 31 .10.1981—ன் படி முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர் பணி வழங்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், அந்தப் பழைய ஓய்வூதிய திட்டம், திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வந்தது. அதற்கு அரசு ஓர் உரிய விளக்கத்தைக் கொடுத்து அவர்களுடைய சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும்படி கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு உடுமலைப்பேட்டை மு.ஜெயக்குமார் பேசினார்.

---

மாநில நிதி சுயாட்சியை பறிக்கும் ஒன்றிய அரசின் சுரங்க– கனிம வள திருத்தச் சட்டம்

# தி.மு. கழகம் வன்மையாக கண்டித்த நிலையில் வாய்மூடி நின்ற ஆங்கில நாளேடு!

## முதல்வர் விஜய்க்கு ஆதரவாக செய்தி வெளியீடு – இ.பரந்தாமன் கண்டன அறிக்கை!

சென்னை, ஆக. 29-

The New Indian Exwpress நாளிதழ் வெளியிட்ட தவறான செய்தியைச் சுட்டிக்காட்டி கழக சட்டத் துறை இணைச்செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ. பரந்தாமன் அவர்களது அறிக்கை வருமாறு:

நேற்று முன்தினம் (27.08.2026) The New Indian Express நாளிதழில் ஒன்றிய அரசு நிறைவேற்றியுள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறை) திருத்தச் சட்டம்-2026 தொடர்பாக, முதல்வர் விஜய் ஒன்றிய அரசிற்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதாக கிடைத்த 'தகவல்' அடிப்படையில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளனர். அரசின் அதிகாரப் பூர்வக் கடிதம் இதுவரை வெளியாகாத நிலையில் 'Source' கள் சொன்ன தகவலை வைத்து செய்தி வெளியிட்டுள்ளனர். ஆனால் அதில் கூடுதலாக இந்த சட்ட திருத்தத்தை தி.மு.க. எதிர்க்க வில்லை என்ற பொய்யான ஒரு தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் தி.மு.க. சார்பில் 12/08/2026 அன்று மேனாள் அமைச்சர் தங்கம் தென்னரசு ஒன்றிய பாஜக அரசின் இந்த சட்ட திருத்தம் 'நிதிக் கூட்டாட்சியின் மீதான நேரடி தாக்குதல்' இது என்று கண்டித்தார். 13/08/2026 அன்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'இது மாநில உரிமைகள் மீதான நேரடித் தாக்குதல் & மாநிலங்களின் நிதி சுயாட்சியை பறிக்கும் மசோதா' என்று வெளிப்படையாக கண்டித்தார். மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்களும் , மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்களும் இந்த மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பேசியுள்ளனர்.



14/08/2026 அன்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'இந்த சட்டம் தொடர்பாக முதலமைச்சர் விஜய் ஏன் எதுவும் பேசாமல் அமைதி காக்கிறார்' என்று கேள்வி எழுப்பிய பிறகு தான் தவெக சார்பில் முதல்வர் விஜய் ஒரு கடிதம் எழுதி உள்ளார் என தகவல் சொல்லப்பட்டது. அப்போதும் அதுபற்றிய அரசு கடிதத்தை வெளியிடவில்லை. தி.மு.க. கேள்வி எழுப்பும் வரை சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2026 பற்றி வாய்திறக்க கூட திராணியற்று இருந்தது தவெக அரசு.

உண்மைகள் இவ்வாறாக இருக்க வெறும் தகவல் அடிப்படையில் முதல்வர் விஜய் எதிர்த்ததாக ஒரு செய்தியை வெளியிடுவதில் அக்கறை காட்டி இருக்கும் The New Indian Express பத்திரிகை, நாடாளுமன்றத்திலும் சரி, ஊடகம், பத்திரிகைகளின் வாயிலாகவும் சரி வெளிப்படையாக ஒன்றிய அரசின் இந்த சட்டத்தை தி.மு.க. எதிர்த்த போதும், எதிர்க்கவில்லை என்ற வகையில் தவறான செய்தி வெளிட வேண்டிய தேவை என்ன.? அழுத்தம் என்ன.?

இந்த செய்தியானது The New Indian Express நாளிதழ் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் கேள்விக் குறியாக்குகிறது. ஆகவே சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2026 சார்ந்து தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த தவறான செய்திக்கு மறுப்பு தெரிவிப்பதோடு, தி.மு.க. வின் உண்மையான நிலைப்பாட்டை பதிவு செய்வது தான் ஊடக அறமாக இருக்கும்.

இவ்வாறு இ.பரந்தாமன் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.